பாஸ்போர்ட், விசா, விமான ஆசனப்பதிவு, இன்ரநஷனல் டிரைவிங் லைசன்ஸ்
முதலியனவற்றைப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.
கவிதாஸ்
22, நவீனசந்தை, மேலைமாடி
யாழ்ப்பாணம்.
போன்: 8149 (4423)

பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

EELA NADU

மலர் 21 மார்கழி 5 முஹறம் 29 இதழ் 310
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-12-79

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
0 றெடிமேட் ஆடைகள்,
0 சேட்டிங், சூட்டிங்ஸ்,
நைலெக்ஸ் சாறிவகைகளுக்குச் சிறந்த இடம்
கவிதாஸ்
22, நவீனசந்தை, மேலைமாடி,
யாழ்ப்பாணம்.
போன்: 8149 (4423)

★ பணயக் கைதிகள் விவகாரம் சூடுபிடிக்கிறது

ராணுவநடவடிக்கைக்கு தயார்

ஈரானுக்கு அமெரிக்கா மீண்டும் கடும் எச்சரிக்கை

வாஷிங்டன், டிச 19

ஈரானிலுள்ள அமெரிக்க பணயக் கைதிகள் பகிரங்க விசாரணைக்குட் டுத்தப்பட்டால் ஈரானுக்கு எதிராக பலாத்காரமற்ற முறையில் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் கப்பல்களைக் கொண்டு ஈரானுக்கு எதிராக கப்பல் போக்குவரத்தை நடைபோன்ற ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

இதே வேளையில் பணயக் கைதிகள் மீது விசாரணை நடைபெறுவது தவிர்க்கமுடியாதென்றால் விசாரணையில் குற்றவாளிகளாக்கப்பட்டு கொலை மீது நடவடிக்கை எடுக்கத்தயங்கப் போவதில்லை என்றும் ஈரானிலுள்ளவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

இதுபற்றி வெள்ளைமாளிகை வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில், பணயக் கைதிகள் பகிரங்கமாக இழிவுபடுத்தி நெருக்கடி நிலைமையை ஈரான் ஏற்படுத்தினால் அதனால் ஏற்படும் விளைவுகளையும் ஈரான் எதிர்நோக்கவேண்டி வருமென்று எச்சரித்துள்ளது. (கு)

பாலதேவு படகு விபத்து: எதிரிகள் இருவரும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பாலதேவு படகு விபத்தில் 57 பேருக்கு மரணம் விளைவித்ததாக குற்றம்சாட்டி இருவர் மீது தொடரப்பட்ட வழக்கில் சாட்சியங்கள் திருப்திகரமாக எதிரிகள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்!

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்ரீஎம் ஜாமிலிமுன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்ட இவ் வழக்கில் கடந்த 1970ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ம் திகதி 'இராச ஜிம்மி இராசரத்தினம் ஆஜராபோகிறார்' என்ற படகில் பயணம் செய்த 'சதுரசேகரன் இராசரத்தினம் உட்பட 57 பேருக்கு மரணம் விளைவித்ததாக சந்தியாகுப்பிள்ளை, பிள்ளை ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணை நடுவில் எதிரிகள் மீது குற்றம் சுமத்துவதற்கு சாட்சியங்கள் திருப்திகரமாக இல்லையென்று கூறி நீதிபதி எதிரிகள் இருவரையும் விடுதலை செய்தார். ஜூரிகள் இன்றி நடைபெற்ற இவ்விசாரணையில் எதிரிகள் சார்பில் திரு ஜிம்மி இராசரத்தினம் ஆஜராகினார். (கு)

ஹரிஸ்பத்துவ தேர்தல் ஆட்சேபனை!

மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஹரிஸ்பத்துவ தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். பி. விஜயசிறியின் தேர்தல் ஆட்சேபனை மீதான மேன்முறையீட்டை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

1977-ல் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக ஹரிஸ்பத்துவ தொகுதியில் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்ற சுயேட்சை வேட்பாளர் திரு எச். பி. ரத்னாயக்கா இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (கு)

காலி இடைத் தேர்தல்

இன்று வாக்களிப்பு

(காலி)

காலித்தொகுதிக்கான பாராளுமன்ற இடைத்தேர்தல் வாக்களிப்பு இன்றுகாலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும்.

சுமார் 47600 பேர் வாக்களிக்கவுள்ள தேர்தலின் முடிவுகள் இன்று நள்ளிரவு வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தி. மு. க. வில் சேர்ந்தனர்

(சென்னை)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் திரு ஆர் ஜனகராமி திரு உ வில் சேர்ந்துகொண்டார்.

(8ம் பக்கம் பார்க்க)

புலோலி வங்கிக் கொள்ளை வழக்கு!

குற்றச்சாட்டுப் பத்திரங்கள் திரும்பப் பெறப்பட்டன

(யாழ்ப்பாணம்)

புலோலி வங்கிக்கொள்ளை வழக்கில் நேற்று எதிரிகளுக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரங்கள், உடனடியாகத் திருப்பி வாங்கப்பட்டன. நீதிமன்றம் எது எப்படி பற்றி அபத்திரத்தில் சிறிய திருத்தம் செய்ய வேண்டியிருந்ததால் குற்றப்பத்திரங்கள் திருப்பி பெறப்பட்டன.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜஸ்ரீ எம் ஜாமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1976மேமாதம் 10ம் தேதி புலோலி பகோ கூட்டுறவு வங்கியின் உடைமையிலிருந்த 857,453 ரூபா பெறுமதியான நகைகளையும், ரொக்கப்பணம் ரூ 7,355 44 சதத்தையும் கொள்ளையடித்ததாகவும், கொடிகாமத்தைச் சேர்ந்த க. கிருஷ்ணபிள்ளையின் ரூ. எண் 480 இலக்க காரை கொள்ளையடித்ததாகவும், நாகராசா மகேந்திரன் ஆகிய பெரியராசா, நாராயணபிள்ளை சந்திரசேகரன், சரித்திரசேகரன், நடராசா அலெக்சாண்டர் ஜெயக்கொடி, ஆறுமுகம் நற்குணநாதன், சின்னத்துரை தவராசா, வேலுப்பிள்ளை பாலசுந்தரம் ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

நத்தார் - புத்தாண்டை முன்னிட்டு
ஜப்பான் றேடியோக்கள்
சலுகை விலையில் 620/- மட்டும்!
உங்களுக்குவேண்டிய சகலவிதமான வெளிநாட்டு உள்நாட்டு றேடியோக்களுக்கு
இன்றே நாடுங்கள்!
எஸ். சுலைமான்கண்டு அன் பிறதர்,
5-7, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 265

கிறிஸ்மஸ் - புத்தாண்டுப் பண்டிகையை குதூகலமாகக் கொண்டாட உங்களுக்குத் தேவையான சகலவிதமான பொருட்களையும் ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ள நகரில் பெயர்பெற்ற ஸ்தாபனம்
குறிப்பிட்ட சில பாட்டா (Bata) பாதணிகளுக்கு விலையில் சலுகைகள் வழங்கப்படுகின்றன.
உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள! - மலிவு விற்பனை!!
சி. சின்னத்துரை அன் பிறதர்,
போன்: 284 39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தந்தி "கல்கி"

வாடகை விளம்பரம்

தேவை

கணக்காளர் விநாயகனொன்றிற்கு கணக்குப் பயிலுநர் தேவை. கணக்கியலில் அறிவுள்ளவரும், யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லையுள் வசிப்பவரும் விருப்பத்தக்கது. கல்வி நற்சான்றிதழ் பற்றிய விபரம் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4421 வே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4421

விற்பனைக்கு

EN 8785 இலக்க மொறிஸ் மைனர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வே. பொன்னம்பலம், கண்டி வீதி, பரந்தன் தொலைபேசி 272. 4422

நினைவாஞ்சலி

செல்வி ஜெயசக்தி பரமநாதன்

பிறப்பு: 18-2-974
மறைவு: 20-11-1979

விடுதலை செய்யும் ஆருயிரில் ஆழ்ந்த மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்வமே! நீ மறைந்து ரூ 31 நாட்கள் பூர்த்தியாகின்றது. நீ மறைந்தாலும் உன் அன்பு உருவம் எம் உள்ளங்களில் சோதிப் பிழம்பாகக் காட்சியளித்துக் கொண்டே இருக்கும். உன் பிரிவைத் தாங்க மாட்டாது வாடி வதங்கி நிற்கிறோம்.

இங்ஙனம்
பெற்றோரும்
உற்றார் உறவினரும்.

வே. பரமநாதன்,
'சக்தி இல்லம்',
5 A, வண்டாரம்,
தபிலதீவு. 4420

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

அறிவித்தல்

1. மேற்படி சங்க பழைய இசுசு லொறிக்கு உருவம் அமைத்தல் (Body Building) கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விருப்புவோர் 31-12-79க்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.
2. பழைய இசுசு லொறி உருவம் (Lorry Body) கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. வாங்க விருப்பமுடையோர் சம்பந்தப்பட்ட படிவத்தில் 31-12-79க்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.
18-12-79. 4427

கி. கனகரத்தினம்,
ஜே.பி.யூ.எம்
உதவியாளர்: கைரத்தினம் சகோதரர்கள்.
சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசும்.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் ஸ்தூரி மார் ரோட்டு, 185ம் இலக்கத்தைச் சேர்ந்த தருமலிங்கம் மகள் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதன விடயத்தில்.

—மரணமெய்தியவர் வழக்கு இலக்கம்: நி/3486

தருமலிங்கம் மகள் விமலாதேவி, 185, கஸ்தூரியார் ரோடு, யாழ்ப்பாணம், தற்போது பிரான்சு படி ஒழுக்கம், கொக்குவில் — மனுதாரர் மேற்குறித்த இலக்கம் கொண்ட வழக்கு மேலே குறிப்பிட்டவரான காலஞ்சென்றவரின் மரண சாதனத்தை ஏற்றுக்கொள்ளுப்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3-ந்திகதி அன்று அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதிப்பிக்கப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1979ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஒப்பம்:
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்
மாவட்டமன்று,
யாழ்ப்பாணம்.

என்னால் வரையப்பட்டது,
ஒப்பம்:
க. கேசவன்
மனுதாரரின் சட்டத்தரணி.
4410

விளம்பரம்

அச்சுவேலி கிராமசபை அலுவலகம் நடாத்துவதற்கு 2000 ச. அடிக்குக் குறையாத விசாலமுடையதும், மலைட, நீர், மின்சார வசதியுடையதுமான, பஸ் நிலையத்திலிருந்து ½ மைல் தூரத்திற்குள் பிரதான வீதியிலமைந்துள்ளதுமான கட்டடம் ஒன்று வாடகைக்குத் தேவை. 31-12-1979க்கு முன் வாடகையைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

நீ. ப. ஜெகநாதன்,
நிர்வாகஸ்தர்,
கிராமசபை,
அச்சுவேலி
4419

மக்கள் கடையில் மரக்கறி ஒழுங்கில்லையாம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயிலுள்ள விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் மக்கள் கடைக்கு மரக்கறி வகைகள் முறையாக மேலிடத்தினால் அனுப்பிவைக்கப்படுவதில்லை என்று பலதரப்பு புகார் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் நாட்டிக் உற்பத்தி செய்யப்படும் கோவா, பீற்றூட், கரட், லீக்ஸ் போன்ற மரக்கறி வகைகளை இந்த விற்பனை நிலையத்திற்கு முறையாக அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண விற்பனை அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளரை இப்பகுதி மக்கள் வேண்டியுள்ளனர்.

அண்மையில் மேற்படி திணைக்களத்தினரு குருநகர் பகுதியிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட தேங்காய் இந்த விற்பனை நிலையத்திற்கு அனுப்பைக்கப்படவில்லை என்னும் புகார் தெரிவிக்கப்படுகிறது (ம)

கத்தோலிக்க திருச்சபையின் இழப்பு

அருட்திரு ஜூலியஸ் டேவிட் கடந்தவாரம் 25-ம் திகதி கொழும்புத்துறை குருக்கள் மடத்தில் தனது 81-வது வயதில் காலமானார்.

பெல்ஜியத்தில் பிறந்தவரான இவர் 1924-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி ஒரு துறவியாக இந்து வந்தடைந்தார். அன்று முதல் வட மாகாணத்தில் பட்டிதொட்டிகளிலெல்லாம் கல்வியையும் கத்தோலிக்க வேத அறிவையும் பரப்புவதில் கவனமாக இருந்தார். இவர் பணிபுரிந்த பகுதிகளில் கிளிநொச்சிப் பகுதிக்கு இவர் ஆற்றிய சேவை காலத்தால் என்றுமே அழியாததும் மறக்கமுடியாததும் போற்றப்பட வேண்டியதுமாகும்.

இவரின் காலத்திலேயே ஒன்பதுகுடிமனைகளாக இருந்த எமது ரோமப் பாடசாலையை இன்று காட்சியளிக்கும் உன்னத நிலைக்கு உயர்த்தினமேலும் அழகே உருவான எமது கிராம ஆலயம் இவராலேயே ஆரம்பிக்கப்பட்டு அதற்கான ஒருவட்டிடமும் விதாபிக்கப்பட்டது.

இவர் மதத்தில் கட்டுக்கதி தமிழ் மொழியிலும் மற்றும் பாண்டித்தியமும் பெற்றிருந்தார் என்பதற்கு உதாரணமாக அவரால் படைக்கப்பட்ட தமிழ் நூல்களான 'தானே குற்றவாளி' 'பிரசங்கியார் பிரசங்கம்' 'கடைத்தீவிக் பேர்னோன ஓவியர்' போன்ற நாவல்கள் சான்றாகும்.

இவரது மறைவு கத்தோலிக்க திருச்சபைக்குக் குறிப்பாக கிளிநொச்சி மக்களுக்குப் பேரிழப்பாகும். கண்ணீரில் ஆத்மா சாந்தியடைய வேண்டுவோம்.

—சந்தன் இன்னாசித்தம்பி

மலேஷியா செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

மலேஷிய இந்து இளைஞர் பேரவையின் அழைப்பின் ஏற்று இம்மாதம் 27 முதல் 30ந் திகதிவரை நடைபெறவுள்ள 17வது தேசிய இந்து இளைஞர் மாநாட்டுக்கு விந்தவராக க. நவலோகன் மலேஷியா செல்லவுள்ளார். இவர் 3 மாதங்களுக்கு அதிகு தங்கி சுற்றுவிந்தரந்த, சமய இலக்கிய வழிப்புகள் நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

திருக்கேதீசரத்தில் திருவாசக விழா

(திருக்கேதீச்சரம்)

ஈழத்தச் சிவனடியார் கூட்டத்தினரின் சாதனை — சிவபூமி மாநாடு, திருவாசக விழா இம்மாதம் 24ம் திகதி ஆரம்பமாகிறது. திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் நடைபெறும் இவ்விழா தொடர்ந்து அடுத்த மாதம் 2ம் திகதி வரை நடைபெறும்.

24ம் திகதி முதல் 29ம் திகதி வரை சாதனை நினைவாகும் சிவபூமி மாநாடு 30ம் திகதி (ம)

வருடாந்தப் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சொடிகாமம் தெற்கு பனம் பொருள் உற்பத்தி கொடிகாமம் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற விருக்கின்றது.

மாணவர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன 1979/80 ஆண்டுக்கான மாணவ மன்றத்தை செயற்படத் தொடங்கியுள்ளன. தொழிற்துறை மாணவ மன்றத்தின் தலைவராக செல்வன் த. இராசவனும் உபதலைவராக செல்வி சு. ஜெகசோதியும் செயலாளராக செல்வன் இ. லவநேசனும் உபசெயலாளராக மு. ரவிகுமாரும் பொருளாளராகச் செல்வன் செ. செல்வகுமாரனும் உபபொருளாளராக செல்வன் க. சோமசேகரமும் பத்திராதிபராக நா. கருணசீலனும் கணாசாய்வாளராக திரு. க. சுந்தரனும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காவலாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரசாங்க தேசிய பொது காவலாளர் சங்க 12-வது வருடாந்தக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவாயினர்.

தலைவர் இ. நடராசா. உபதலைவர் மு. கிளப்பிரகாசம் செயலாளர் எஸ். கிருஷ்ணராசா துணைச்செயலாளர் எம். குணரத்தினம் ஆகியோர் தெரிவாகினர்.

ஆறுபேரைக் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்து சமய அபி. சங்கம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. ச. சுந்தரம் உபதலைவர்கள் திருவாளர்கள் அ. சரவணமுத்து, க. முருகையா பொருளாளர் திரு. கி. திருநாவுக்கரசு உபபொருளாளர் திரு. நா. நடராசா, செயலாளர் திரு. த. விஜயரெத்தினம் உப செயலாளர் திரு. கி. மாதவகுமார் பதினொரு நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவாகினர்.

விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணார்பண்ணை கந்தர் மடம் பழந்தொழுவுக்கு அருகாமையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சித்திரவளாகத்தமர்ந்த பதாரக் தோல்நிமூர்த்தியான ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதத்தை கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு சஜமுக சூரசம்மார உற்சவமும் பின்னர் ஆறுமணிக்கு அபிஷேகமும் தரிசனமும் இடம் பெறும்.

இங்கே கிழமை 24ம் திகதி அதிகாலை நான்கு மணிக்கு மணமதி ஹோமம் அபிஷேகதீபாராதனை நடைபெறும்.

"அரச அதிபரே விசாரணை நடத்தவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வடக்கு மீன் தொழிலாளர் நியமனம் தொடர்பாக முறையற்ற நடைமுறைகள் நிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

மேற்கூறிய பதவிக்கு இக்கிராமசபை முதல் விண்ணப்பம் கோரியிருந்தமையினால் நியமித்ததாகவும் இது தொடர்பாகவே சிலர் வேறுபாடுகள் எழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேற்கூறிய நியமனம் முறையற்றது என்றுகோரி இன்று வியாழக்கிழமை காரைநகர் வடக்கு கிராமசபைக்கு சத்தியாக்கிரக உண்ணாவிரதம் ஒன்றை அனுஷ்டிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த நியமனம் தொடர்பாக அரச அதிபர் ஒரு விசாரணையை நடத்தி மாறு கோரும் துண்டுப் பிரசுரமொன்றை லண்டன் பாரத ஒற்றுமை முன்னணியைச் சேர்ந்த டாக்டர் ஆ. தாமலிங்கம் வெளியிட்டுள்ளார்.

திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்த பல வருடங்களாக நிர்வாக உதவியாளராகக் கடமையாற்றிய திரு. க. சிவசம்பு திடீரென யாழ் கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (சொ

மரண அறிவித்தல்

திருமதி ரோகினி சபாரத்தினம்

திருமதி ரோகினி சபாரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பர் சபாரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் விஜயரத்தினத்தின் மகளும் டாக்டர் ஜெயதீசன் (அவுஸ்திரேலியா), ஜெயராணி (மலேசியா), சர்வேசன், வீரேசன் (சபா), ஜெயதேவி (மலேசியா), ஜெயகுமாரி U K), கணேசன் (மின் அத்தியட்சகர், பட்டினசபை, கல்முனை), ஜெயசோதி ஜெயமணி (மலேசியா), ஜெயந்திரன், சுபாஸ்சந்திரன் (கிறீஸ்), டாக்டர் ரவீந்திரன் (U K) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெயராணி, கார்த்திகேசு, ஜெயமணி, இந்திராதேவி, நவரட்ணம், ஜெயசிங், சிவயோகம், ஜெயகாந்தன் (கூட்டுறவு இலாகா சிரேஷ்ட உதவி ஆணையாளர்), குமாரசிங்கம், நிரஞ்சலா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, இராசையா, வயித்திலிங்கம் நடராசா, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஆனந்தமனை வதிரி சரவெட்டி இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காகவதிரி ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். ஈமக்கிரியைகளுக்கான நேரமும்திகதியும் பின்னர் வானொலி மூலம் அறிவிக்கப்படும்.

"ஆனந்தமனை",
வதிரி,
கரவெட்டி.

4428

மக்கள் கருத்து

யாழ். மேயர் தரும் விளக்கம்

12-12-79 ம் திகதிய 'எழுநாடு' சொர்ணவடலி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திரு. ச. நாராயணசாமி 'மக்கள் கருத்து' என்ற பகுதியில் எழுதியுள்ள கடிதம் சம்பந்தமாக இந்த விளக்கத்தை வெளியிட வேண்டுகிறேன்.

மேற்படி கடிதம் குறிப்பிட்டுள்ள கொக்குவில் மேற்கு, சொர்ணவடலி வீதி (ஒழுங்கை) நீண்டதோர் பாதையாக இருந்தாலும், அது வாழ்மிகுந்த மாநகர நிர்வாக எல்லைக்கு அப்பாற்பட்டதாக பிரிதோர் உள்ளூராட்சி அதிகாரசபையின் எல்லைகளுக்கு உட்படுவதாகவுள்ளது. அந்த ஒழுங்கையைச் செப்பனிடும் பொறுப்போ அதிகாரமோ இச்சபையின்மீது சுமத்தப்படக்கூடியதொன்றல்ல.

இரண்டாவதாக அவர் குறிப்பிடும் தட்டாதெரு அரசடி ஒழுங்கை உண்மையில் மாநகரசபையால் எப்போதோ பழுதுபார்த்திருக்கப்பட்டிருக்கவேண்டும் ஆயினும் அது தாமதமானதற்குக் காரணம் அதிகாரமளிக்கப்படாத ஒருவர் அந்த ஒழுங்கையின் மக்கியைப் பரவிவைத்தார். மக்கியை அகற்றாது ஒழுங்கைக்குக் கல்லுப் பரவினாரிருந்தால் சாத்தியமில்லை என தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். அடைமழை காரணமாக மக்கி இறுகிப்போயுள்ளது. மக்கியைப் பரவிய ஒழுங்கையில் பரவியவர்மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. அவ்வேலை கூடிய விரைவில் மேற்கொள்ளப் படும்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைகளுக்கு உட்படவும், சபையின் பொறுப்பில் இல்லாத பெருந்தெருக் திணைக்களத்துக்குச் சொந்தமான பெருந்தெருக்கள் உள்ளன. மேற்படி உண்மைகளைத் தெரிந்துகொள்ளாது, மாநகரசபை எல்லைகளுக்கு உட்படவும் ஏன், சபையின் நிர்வாக எல்லைகளுக்கு அப்பாற்படவும் உள்ள எல்லாச் சேவைகளுக்கும் பொதுப்படையாக சபைமீது பகிரங்கமாகவே குற்றம் சுமத்தும் போக்கு நியாயமானதல்ல.

யாழ்ப்பாண மாநகரசபையின் தெருக்கள், ஒழுங்கைகள் அநேகமானவை 1971 க்கு இருந்தே மிக மிக நீண்ட காலம் வருடாவருடம் மேற்கொள்ளப்படவேண்டிய ஒட்டை உடைசல்கள் ஆற்றுவதுபோன்ற பராமரிப்பு வேலைகள் கவனிக்கப்படாது தாமதம் செய்யப்பட்டு பழுதடைய விடப்பட்டிருந்தன. தெருக்கள், ஒழுங்கைகள் முழுமையுமே இன்று புதிதாகப் போடப்படவேண்டிய நிலை.

கடந்த ஆறு மாதத்துக்கு முன்பாகவே ஒரு சபை, இருக்கக்கூடிய சாதனங்களையும், தொழிலாளர்களையும், கிடைக்கக்கூடியதாகவுள்ள பொருள்களையும் பொறுத்தே வேலைகளை துரிதமாக மேற்கொள்ள முடியும்.

ஆயினும் அனைத்தையும் ஏக காலத்தில் செய்ய முடியுமென எதிர்நோக்க முடியாது. இக்கஷ்டங்கள் அனைத்துக்கும் மூல காரணம் இலங்கையின் ஏனைய பாகங்களைப்போன்று எமக்கு தெரு வேலைகளை மேற்கொள்ளுவதற்கு கருவிகளில் கிடையாமையாலும் கிடைக்கக்கூடிய வாழ்ப்பாணத்து (சுண்ணாம்பு) கற்கள் தரமானவை போக்குவரவுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியனவல்ல. மேலும் யாழ்ப்பாணத்தில் நிலவும் தொழிலாளர் தட்டுப்பாடு வெடிமருந்துத் தட்டுப்பாடு காரணமாக மாரிகால ஆரம்பம் முதல் வைகாசி மாதம்வரை கல்லுப் பெறுதட்டுப்பாடு நிலவி வருவது தெரிந்ததே. நான் பதவி ஏற்றபோது, தாருக்குத் தட்டுப்பாடு நிலவியது. தார் கிடைத்தபோது கலவறைக் கருவிகள் புகையிரதப் பழுதியில் வரவுகளுக்குத் தட்டுப்பாடு. அதனால் நாம் தார் பீப்பாக்களை லொறிகளிலேயே ஏற்றி இவ்விதம் பல தெருக்களைப் புதிதாக அமைத்துள்ளோம். இச்சிரமங்கள் அனைத்தையும் ஒரளவு துரிதகதியில் எதிர்கொண்டு மணிக்கணக்கு துரிதப்படுத்த முடியுமே அல்லாது மாயாஜால வித்தைகளால் யாழ்ப்பாணத்திலுள்ள பழுதடைந்த நிலையில் விடப்பட்டிருந்த விதான அனைத்தையும் ஒரே இரவில் செப்பனிடுதல் சாத்தியமல்ல என்பதை உணர்ந்து, பொதுமக்கள் சிறிது பொறுத்துக் கொள்வார்களாகில் வெகுவிரைவில் நகரில் உள்ள தெருக்களை மாவதிறவுடன் செப்பனிடுவோம் என்று உறுதியளிக்கிறேன். சபையின் எல்லைக்கு உட்படும் பெருந்தெருத்திணைக்களத்துக்குச் சொந்தமான தெருக்களை அத்திணைக்களம் தான் செப்பனிட வேண்டும்.

இ, விசுவநாதன்
முதல்வர்

இந்தியக் கலை-நோக்கமும் இயல்பும்

அ. சோமேசசுந்தரி பி ஏ. [சிறப்பு]
(உதவி விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

'கலை எப்பதற்குத்', 'இந்தியாவிலே கலை' என்பதற்குப் பெருக வேறுபாடுகளைக் கண்டறிந்த ஆனந்த குமாரசாமி அவர்களே எடுத்துக் காட்டியுள்ளார். இந்தியக் கலையானது மிகவும் பரந்து பட்டதும், ஆழமானதுமாகும். அதன் நோக்கங்களும் இயல்புகளும் பாரிய வேற்றுமைகுறியவை. இந்தியக் கலையின் நோக்கங்களே பெருமளவுக்கு அதன் இயல்புகளை நிர்ணயிக்கின்றன.

இந்தியாவிலே கலையானது நாளோறும் உண்ணும் உணவு போல வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும், தேவையின்போது அத்தேவையின் தன்மைக்கேற்ப அமையும் ஒன்றாகவும் அமைந்துள்ளது. அதனால் தனிப்பட்ட கலைஞனின் சிந்தனையும், சோம்பாதனையும் இந்தியக் கலையில் முக்கியம் பெறுவதில்லை. அதற்குப் பதிலாக ஒரு காலகட்டத்தின் தேவையும் வசதியுமே முக்கியத்துவம் பெறுகிறது. இந்து எத்தகைய வேலைப்பாடும் கலைஞனது வேலைத் தன்மையிலே தங்கியிராது அந்த வேலைப்பாட்டின் காலகட்டத்தினதும் சமூகத்தின் வாழ்க்கையுடைய மனோபாவங்களின் தன்மையிருப்பதையே கண்டு கொள்ளக் கூடியதாயுள்ளது. குருசீட முறைப்படி தொழில் மரபுகளை மற்று கலைப்பொருட்களைச் செய்வதைத் தன் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட கைத்திறன் படைத்தவராகவே இந்த வேலைப்பாடுகள் ஆக்கப்பட்டன. ஆயின் இந்தியக் கலையின் வெவ்வேறு காலகட்டங்களின் தனித்துவமும், புதுமையும் ஏற்படுவதை நாங் காண்கிறோம். ஆனால் இவை திட்டமிட்டுச் செய்யப்பட்டவை அல்ல. ஒரு காலகட்டத்துக் கலையை மற்றொரு காலகட்டத்து கலையின் இருந்து வேறுபடுத்தும் வடிவ மாற்றங்கள் அவ்வக் காலத்துச் சமய தத்துவங்களின் தேவைகளையே பிரதி பலிக்கின்றன எனவே இந்தியக் கலையானது அவ்வக்காலகட்டத்து வாழ்க்கைத்தேவையை நிறை வேற்றுவதாகவும் அதற்கேற்ப இயல்பில் மாற வேண்டியுள்ளதையும் நாம் நன்கு உணரலாம்.

மேலே குறிப்பிட்ட அதே நோக்கத்தினாற் போலும் ஒரு குறிப்பிட்ட கால பகுதியைச் சேர்ந்த கலை வேலைப்பாடுகள் அனைத்தும் ஒரே பண்புகளைக் கொண்டனையாக அமைந்துள்ளன. அவை அனைத்தும் சமகாலவளர்ச்சியில் பண்புகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன ஒரு புடவையில் சிறிய துண்டு மிகப்பெரிய அலங்காரமான கோயில் வெளிப்படுத்தும் அதே பண்புகளையே வெளிப்படுத்துவதாக அமைவதில் இந்தியக் கலையின் ஒரு சிறப்பம்சம் தன்மையை உணரலாம்

இந்தியக் கலையின் அதிக முக்கியத்துவம் பெறுவது அவ்வக் காலகட்டத்துச் சமயத் தேவைகளைப் பிரதிபலிப்பதாக அமைவதாகலாம் இந்திய புராணக் கதைகளின் ஆச்சரியப்படத்தக்க விடயங்களும், இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட விடயங்களும் அமைவது போலவே இந்தியக் கலையிலும் இந்த வகை இயல்புகள் இடம் பெறுகின்றன. இவை, இந்தியப் பண்பாட்டை அறியாதவர்களுக்கு விளங்கிக்கொள்ள முடியாதனவாகவும் உள்ளன இதற்கு இந்தியக் கலையானது தான் வெளிப்படுத்த இருக்கும் விடயத்தை விபரிக்கும் சட்டமல் ஒருதுறியீட்டின் மூலமாகச் சுட்டிக்காட்ட முயற்சிப்பதே காரணமெனலாம். இந்தியச் சிற்பமானது ஒரு முழுப் பெரிய கதையை எடுத்து தன் கலைவுளுக்குக் கருக்கொடுக்கிறது எனக் கூறப்படுகிறது

இந்தியக்கலையானது அழகியல் காரணிகளுக்காகவோ அழகைக் ரசிப்பதற்காகவோ சிருஷ்டிக்கப்படவில்லை அது இந்திய தத்துவஞானம், இந்திய புராண, இதிகாச மரபு வழிக்கதைகள் ஆகியவை கூறும் அதே உண்மைகளைத் தான் சொல்ல முற்படுகிறது எனவே நாம் கலையிலும், பொருட்களிலும் காணும் கலை வடிவங்களை இந்தியத் தத்துவத்தின் உரையாகவே எடுக்க வேண்டும் எனக்கூறுவது பொருத்தமானதாகும். இக்கலைச் சிருஷ்டிகள் மனித வெளிப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு அனுபவத்திற்கு மனிதன் வடிகும் படவரிகளாகவுள்ளன என விபரிக்கப்படுகிறது

இந்தியக் கலைமரபு எப்பொழுதும் தத்துவ வரைவறைக்குள் புகுத்தப்படுகிறது. அதனால் மேலைநாட்டில் மரபினால் வளர்க்கப்பட்டதாக விதந்திக் ஸ்தம்பிதம் அடைவதும் அவை வேண்டியுள்ளது ஆனாலும் தீபெத்திய கலை மரபு போன்று தெடுவிடியான மரபாக இந்தியமரபு அமைவதற்கு காரணத்திலும் மதக் கவர்ச்சியும், வரைவறையும், கட்டுப்படுத்திய அதே வேளை தனிநபர் கலைப் படைப்புக்குக் இடமிருந்தது. இதுகூட உதாரணமாகச் சோழர் காலத்தில் நடராஜர் சிலை உருவாக்கப்பட்டதைக் கூறலாம்

இந்தியக் கலைப்படைப்பு மதிப்பீடோ நோக்கோ அமைந்தது. வழிபடுவோனுக்குக் கொடுக்க வேண்டிய செய்தியைத் தல்லியமாகக் கொடுக்க முயன்றதாகும். அதனால் ஓவியங்கள் தீட்டும்போது தெய்வங்கள் அழகிய வரைவறைகளினை நிறங்களை பாவிக்கப்படாது, கூறப்படும் செய்திக்கேற்ப வர்ணங்கள் பயன்படுத்தப் படுகின்றன இந்தியக் கலையின் நோக்கம் வாழ்வு என்று கருதும்போது அது இந்திய மதச் சிந்தாந்தங்களால் அர்த்தம் பெற்ற வாழ்வைத்தான் குறிக்கிறது என்பதை மறந்துவிட முடியாது

இந்தியக் கலைஞனின் நோக்கங்களும் இந்தியக் கலையின் இயல்புடன் அதிக தொடர்புடையதெனலாம். இந்திய கலைஞன் சிருஷ்டி அர்த்தரவுடன் சேர்ந்த சிருஷ்டியில் பங்கு கொள்கிறான் என்ற எண்ணம் இருந்தது அதனால் பௌத்த இந்து மரபிக்கலை உருவங்கள் செய்தவர்மூலம் சொல்லாக் [செல்லாக் என்ற நம்பிக்கை இருந்து வந்துள்ளது. கலைஞன் ஒருவன் தன் பிறப்புத் தொழிலாகவே இக் கலைப்படைப்பைச் செய்தாலும் தனது தனியுணர்வைக் காட்டுவதைவிட தனது காலத்திய சமூக மக்களது உணர்வுகளையே வெளிப்படுத்தினான் அவன் தான் இயற்கையாகவே கண்டதைச் செய்ய விரும்பவில்லை இயற்கையைவிட மேலான ஒன்றை இயற்கை மூலமாக இயற்கையினூடாகச் சித்திரித்தான். இந்தியக் கலைஞன் தான் பார்த்ததைத் தீவுவதை விட தொடுபுலக் உணர்வதையே செய்தான். ஆதலால் இந்தியக் கலை கண்பார்ப்பது போல் சித்திரிப்பதில் இருந்து விலகி நிற்கிறது

இந்தியக் கலை அநுபவத்தில் ஒரு மெய்மறந்த நிலையில் கலைஞன் பொருளுடன் ஒன்றிக்க ஊக்குவிக்கப்படுகிறான். அப்பொழுது தான் தெய்வத்தின் உருவம் அவன் மனக்கண்முன்னே தோன்றுகிறது. அநுபவத்திலுலே ஏற்கனவே அறிந்த ஒன்றின் வரைவறைகளே அனுக்குப் பின்னணியாக உள்ளன, அவன் தன் மனதிலுள்ள உருவத்தை வடிப்பதற்கு இந்திய தத்துவஞானத்தின் பிரதான வழிகளாகிய யோகம் தியானம் என்பவற்றைக் கையாளுகிறான் இது போன்ற தன்மை மேற்கத்தைய அறிஞர் மத்தியிலும் வழக்கில் இருந்தது என்பதற்கு 'பிரான்ஞ்சிலிருந்தோ' என்பவர் எடுத்துக்காட்டாகவுள்ளார். இவரும் இந்தியக் கலைஞர் மிகவும் பயன்படுத்தியே செய்த கலைப்படைப்புகள் வழிபாட்டைத் தூண்டும் பண்பினவாயுள்ளன

இந்தியக்கலையானது பரந்துபட்ட ஒரு விடயமாக இருந்தாலும் அது தனக்கேயுரித்தான நோக்கத்தையும் இயல்புகளையும் கொண்டுள்ளது இந்தியக்கலையின் நோக்கமானது இந்திய மக்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது எனப் பொதுப்படக் கூறலாம். அதனால் தனிப்பட்ட கலைஞனின் முக்கிய

(7 ம் பக்கம் பார்க்க)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

4 CYCLE BRIGGS & STRATTON

ஹேவீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

Mel Ads

நிஹாலின் பதவித்துஷ்பிரயோகம்: ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை

குடியுரிமைகளும் பறிக்கப்பட வேண்டுமாம்

(கொழும்பு)

திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் நீதி அமைச்சின் செயலாளராகப் பதவிவகித்த திரு. நிஹால் ஜெயவிக்கிரம தமது பதவியைத் துஷ்பிரயோகம் செய்தார் என ஜனாதிபதி விசேட ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் அதிகார துஷ்பிரயோகம் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி விசேட ஆணைக்குழு தனது 2 வது அறிக்கையை நேற்றுக்காலை வெளியிட்டது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

திரு ஜெயவிக்கிரமாவின் குடியுரிமைகள் பறிக்கப்பட வேண்டும் என்றும் கமிஷன் தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான உத்தியோக பூர்வ அறிக்கையாக இது வெளியிடப்பட்டது.

நீதி அமைச்சின் [செயலாளராக இருந்த திரு. ஜெயவிக்கிரம வெளிநாட்டு நாணய கோசடி சம்பந்தமான ஆணைக்குழு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளையில் அதில் தலையிட்டது உட்பட 18 குற்றச் சாட்டுகள் அவர் மீது [சுமத்தப்பட்டிருந்தன.

இவற்றில் மீதான குற்றச் சாட்டுகளை நீதியரசர் திரு. ஜி. ரி. விசாரத்தின, எஸ். சரவானந்தா கே. ரி. ஜி. அக்கிஸ் ஆகியோர் 165 நாட்கள் விசாரணை நடத்தினார்கள். [ஈ]

வடபகுதியின் நீர்வளம்: அமைச்சர் 'இராசு' எச்சரிக்கை

(கொழும்பு)

"வடபிராந்தியத்தில் நிலத்தடியில் இருக்கும் நீரை விரைவாக அதிகளவில் இறைத்துவந்தால் அப்பகுதி விரைவில் பாலைவனமாகி விடும். வடக்கில் நீர்வளத்தைப் பயன்படுத்துவதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்ற இஸ்ரேலிய நிபுணர்களின் ஆலோசனையைக் கருத்திற்கொண்டு நாம் செயற்படவேண்டும்."

இவ்வாறு பிராந்திய அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"அரசியல் அமைப்பில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கு இடமளித்த ஒரே ஒரு அரசாங்கமான இன்றைய அரசை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்தை அளித்தது இன்றைய அரசே" என்று கூறிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களே தத்தமது பகுதிகளின் ஒன்றிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் விரைவாகத் தயாரிக்கவேண்டும்.

"ஒன்றிணைக்கப்பட்ட திட்டங்கள் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு புதிய வழிகள் கிடைக்கும். இங்கு வறுமை ஒழிப்பு, இளைஞர் குடியேற்றம், ரூம், முதலீட்டுப் வளர்ப்பு ஆகியன இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளலாம். விரைவில் நிறைவேற்றப்பட இருக்கும் மாவட்ட அலுவலகங்கள் மூலம் ஒன்றிணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்" என்று கூறினார். [ஈ]

அகழ்வு முதல் நிலையாய்வு

(வாழ்ப்பாணம்)

வரணி — பருத்தித்துறை-கொடிகாமம் பிரதான வீதியில் தொண்டைமானாறு மேலாய்வொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளர் திரு. செ. திருஷ்ணராசாவும் பல்கலைக்கழக மாணவன் திரு. சி. பரமசுப்பிரமணியமும் மேற்கொண்டனர்.

பழைமை வாய்ந்தது என்று கருதப்படும் கல்லிடமொன்றின் பாகம் ஒன்றினை (செங்கட்டி மொன்றினை) தரவறியும் பொருட்டு எடுத்துவந்துள்ளனர். எட்டரை அங்குல நீளமும் எட்டரை அங்குல அகலமுள்ள கல்லிடம் ஒன்று அழிந்த நிலையில் இரண்டு அறைகள் கொண்டதாகக் காணப்படுகின்றது. அவ்வூர்ப் பொதுமக்களது துணையுடனே விபரமறியாமல் 'காடு அழிக்கப்படும்போது இக்கல்லிடம் வெளிப்பட்டது' என்றும் கூறினார்.

8 அடி விட்டமுடைய உரல் போன்ற அமைப்புடைய ஒரு கல்லும் கல்லிடத்தில் மத்திய பகுதியிலிருந்து எடுக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளது. மனித எலும்புக்கூடுகளும், சாம்பலும் கொண்ட அகழிப் பேழைகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. [ஈ]

வழிப்பறி சைக்கிள் மீட்பு

(சம்பவம்)

ஆனைக்கோட்டையில் வைத்து வழிப்பறி செய்த விலை மதிப்புள்ள சைக்கிளை ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. . . . . தலைமையில் சென்ற கோஷ்டி மடக்கிப்பற்றி சந்தேக நபர் மூவரையும் கைது செய்து திருகோணமலையில் வைத்துள்ளது.

சம்பவதினம் வாழ்ப்பாணக் கராஜ் ஒன்றில் வேலை செய்யும் எஸ். இரத்தினராசா என்பவர் இரவு சுமார் 8-30 மணியளவில் ஆனைக்கோட்டை நாவலி பாதை வழியாக வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் மூவர் வழிமறித்து அவரைத் தாக்கி சைக்கிளைப் பறித்துச் சென்றனராக.

விசாரணையில் சார்ஜன்ட் திரு. . . . . ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். தேவராசா, எம். . . . . , ரி. நிர்மலன் ஆகிய மூவரையும் கைது செய்து சைக்கிளையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், மூவரும் இம்மாதம் 14 ம் திகதிவரை தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். [ஈ]

நூல்கள் அறிமுகப்பளிப்பு

(வாழ்ப்பாணம்)

நாவலியூர் பட்டினசபையின் பொதுநூல் நிலையத்திலும், மலையகம் சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்திலும், புங்குடுதீவு சர்வோதய நூலகத்திலும், அதன் கிளை நூலகங்களுக்கும், வேதாரண்யம் திரு. க. . . . . ராசா பல அறிவு நூல்களையும் சமய வெளியீடுகளையும், சரித்திர நூல்களையும், இதிகாச நூல்களையும் விவசாய நூல்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். நூல்களை வழங்கும்போது "மக்களுக்கு கல்வி அறிவு இன்றியமையாதது. அறிவுப் பசியை பகிர்ந்து உணவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

(கொழும்பு நி.)

'கலாவதி' நூல் வெளியீடு

(வாழ்ப்பாணம்)

பரவலி ஆசிரிய வாசகர்களின் பயனாக ஆசிரிய வாணவர்களினால் வெளியிடப்படும் 'கலாவதி' நூல் வெளியீடு இன்று பி. ப. 2 மணிக்கு வாசகர் மண்டபத்தில் நடைபெறும். [நா]

வீதி திருத்தப்பட்டது

(நெல்லியடி)

கடந்த பல வாரங்களாக பெய்த மழையினால் மோசமடைந்திருந்த நெல்லியடி கொடிகாமம் வீதி விசேஷநிதி மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

பணியிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகப் பிரதம பொறியியலாளரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் இவ்வீதி புனரமைக்கப்பட்டது.

இவ்வீதியின் சீர்கேட்டினை 'ஈழநாடு' செய்தியாக வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

வங்கி ஊழியர் பயிற்சிக் கல்லூரி

(கொழும்பு)

மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் புதிதாகச் சேர்த்தெடுக்கப்படும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு வங்கிப் பயிற்சிக் கல்லூரியொன்று விரைவில் நிறுவப்படுமென்று நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். [வெ]

மட்டக்களப்பில் விடமைப்புத் திட்டங்கள்

(மட்டக்களப்பு)

பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசாவின் வருடாந்த தொகுதிதோறும் வீடமைப்பு வரிசைக்கு வீடு வழங்கும் திட்டத்தின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் எண்பது வீடுகள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் அமைக்கப்படவுள்ளன.

பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் மட்டுநகர் முதல்வருமான திரு செல்லையா இராசதுரையின் பொறுப்பில் 20 வீடுகள் வவுணதீவிலும், மட்டக்களப்பு 2-வது பா உ ஜனாப் பரீட் மீராலெப்பையின் பொறுப்பில் 20 வீடுகள் காத்தான்குடியிலும், பட்டிருப்பு பா உ திரு பூ தணேசவிநாயகத்தின் பொறுப்பில் 20 வீடுகள் களுதாவளையிலும், நீதி மந்திரியும் அக்கரை பா உ திரு கே டபிள்யு தேவநாயகத்தின் பொறுப்பில் 20 வீடுகள் மகிழவட்டுவானிலும் அமைக்கப்படவுள்ளன. [வெ]

லாபம் 10 சதம் அபராதம்: ரூபா 500

(மூதூர்)

சீனியில் 10 சதம் கோல்மோசடி செய்த ஒரு கடைக்காரருக்கு மூதூர் நீதிபதி திரு ஏ. கே. . . . . 500 ரூபா அபராதமும் நீதிமன்றம் எழும்வரை மறியலும் விதித்தார். [வெ]

வல்மெலிக்ஸ்

GARADS

வல்மெலிக்ஸ்
பாரம்பரிய மூலிகை மருந்து
ஆடாதோடை எமது முன்னோர்களால்
தொண்டை அரிப்பையும், இருமலையும்
குணமாக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஆடாதோடை வேரினை, சுத்தமாக்கி செறிவாக்கி
அடிப்படையாகக்கொண்ட
ஒரு நவீன இருமல் பாணி வல்மெலிக்ஸ்.
வல்மெலிக்ஸ் இருமல் லொசெஞ்ஜெஸ்சும்
கிடைக்கும். சுகாதாரமாக ஈயக்கடதாசியில்
வசதியாக வருகிறது.
வல்மெலிக்ஸ் லொசெஞ்ஜெஸ் தொண்டைக் கர
கரப்பையும், தொல்லை தரும் இருமலையும்
குணமாக்க, உரியது.

விற்பனையாளர்கள்
ஜே. எல். மொறிசன் சன் அன்ட்
ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டெட்.,
த. பெ. இல 430, கொழும்பு

ரூபா 6/30

ஒரு லொசெஞ்ஜெர் 15 சதம்

அது பழையதும் புதியதும்

மதகுரு படுகொலை: சி.ஐ.ஏ. காரணம் என்கிறது ஈரான்!

தெஹ்ரான், டிச 19
ஈரானிய மதகுரு நேற்றுச் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதற்கு அமெரிக்காவும், சி ஐ ஏ யே காரணமும், ஷாவின் முன்னாள் அரசியல் பொலிசாருமே காரணமென்று ஈரானிய புரட்சிச் சபையும் அமெரிக்கப் பணயக் கைதிகளை வைத்திருக்கும் மாணவர்களும் குற்றஞ்சாற்றியுள்ளனர்.

துக்கம் அனுஷ்டிப்பு

புரட்சித் தலைவர் அயத் தொல்லா சொய்னியிக்கு ஈரான் அரசியலமைப்பின் வழங்கப்பட்டுள்ள அதிக அதிகாரங்களை ஆராய்ந்துவந்த— நேற்று பகிரங்கச்செய்யப்பட்ட மதத் தலைவர் டாக்டர் மொகமட் மொர்தாவின் மறைவு குறித்து ஈரானிய தலைவர் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளையில் ஈரானிய ஷா அமெரிக்காவிலிருந்து வெளியேறி பகுமா வில் வாழ்ந்துவந்தாலும் அவரை அமெரிக்காவே ஈரானுக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அயத் தொல்லா கொமெய்னி தெரிவித்துள்ளார். [இ]

ஐ.நா. வின் பிரேரணை

[நியூயோர்க்]

ஐ நா பொதுச் சபையின் 34 வது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட "சர்வதேச உறவுகளில் மேலதிக கொள்கைகள் அனுமதிப்பதில்லை" என்ற பிரேரணையை பொதுச் சபையின் முதலாவது கமிட்டி (அரசியல், பாதுகாப்பு) பரிசீலனைக்கு எடுத்துள்ளது.

இப்பிரேரணை இன்றைய சட்டத்தில் மிக அவசியமானதே.

உலக இன்று புதிய நாகரிக வளர்ச்சியை அடைந்து விட்டது மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை என்ற சுலோகம் கிஸ்வருபமெடுத்து நிற்கிறது ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆக்கிரமித்து வைத்திருப்பதும் சுரண்டி வாழ்வதும் காட்டுமிராண்டித்தனமான செய்கைகளாக கருதப்படவேண்டியவை.

20 நூற்றாண்டின் மிகச் சத்தான நாடுகளில் கொரிய ஹிஸ்லர் நடாத்தியமேலாதிக்க வெறியாட்டங்கள். 6 கோடி மக்கள் அந்த வெறியாட்டங்கள் விழுங்கின, ஏனைப்பெருக்கு பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தின. அதன் பின்னர் நடைபெற்ற பிராந்திய யுத்தங்கள். தென்கிழக்காசியாவில் குறிப்பாக வியட்நாமிய போர் இவை யாவுக்கும் காரணம் என்ன? ஆதிக்க ஆசைதான்.

இன்று "இணக்கி வாழுவது" என்ற சித்தாந்தம், சர்வதேச அரசியலில், உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம், அடிபடத் தொடங்கிய பின்னர் இந்த ஆதிக்க ஆசை பெறுவது விநாசரீகமானது. இந்த இணக்க அமைதியின் பாதையில் "அமெரிக்காவுடன் ஷாவுக்கு கட்ட ஸாக்" என்று உடன்படிக்கைகள் இரகசிய வைச்சாத்திடுவிட்டன ஒரு உலக யுத்தங்களின் கனவை விருந்த ஐக்கிராப்பாவில் சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் ஒரு வரலாறாக பிரகடனம் பெற்ற 100 ஐக்கிய நாடுகளின் ஹெல்சிங்கி மாநாடு 1975 நடைபெற்றுள்ளது

"கெடுபிடி யுத்த"த்தை மீண்டும் புதை குழியிலிருந்து எடுக்க சீனா போன்ற நாடுகள் முயற்சிப்பதாக மேற்கு நாடுகளின் அரசியல் விமர்சகர்கள் குறைகூறுகின்றனர். ஐ.நா. சபை உலக நாடுகளின் சக்தி உலக சமாதானத்தைக் காப்பிடுவது காப்பிடுவதில்லை, சில நாடுகளுக்குமுள்ள சமத்துவமான உரிமைகளை பேணுவதுக் கதன் தலையாய கடமை சமத்துவமான உரிமைகளைப் பேணுவதென்பது உலகில் எந்த நாடுகளுக்கும் ஆதிக்க உரிமை இல்லை என்பதையே காட்டுகிறது ஆயினும் இன்றைய நிலையில் ஐ நா. இன்னும் தீவிரமாகச் செயல் பட முன்வைவது வரவேற்கத் தக்கதே!

—ஊடுருவி

இரும்புக் குழாய்த் திருட்டு; இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் குழாய்கள் திருடப்பட்டதாக சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டதுடன், சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த வர் எம் ஜமீல் யாழ் பொலிஸ்நிலையத்தில் செய்துள்ள புகாரில், தங்களுடைய பண்டசாலை ஒன்று மானிப்பாய் வீதியில் ஐந்து சந்தியில் இருப்பதாகவும், அப்பண்டசாலையிலிருந்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் குழாய்கள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் ஜோர்ஜ், ராஜரத்தினம் ஆகியோர் புலனாய்வுசெய்து ஈடுபட்டுள்ளதை தொடர்ந்து தலைமறைவாகத் திரிந்த கசீஸ் என்பவரைச் சாவகச்சேரியில் வைத்துக் கைதுசெய்துள்ளதுடன் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் குழாய்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போது நீதிபதி இம்மாதம் 28த் தேதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். [செ]

எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடுங்காயம் விளைவித்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதி. சே பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில், 78 வெற்றிலை 28த், வரணி இயற்றாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகாதேவாவுக்குக் கடுங்காயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நாகர் கிட்டணியின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் பி சபாரத்தினம், சட்டத்தரணி பி சதீபிரபாலனின் அனுசரணையுடன் ஆஜராகி. [வ]

அறவழி வாழ்வு பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவினரால் நடாத்தப்படுகின்ற சமூகநல மாற்றத்திற்கான அறவழி வாழ்வு பயிற்சி முகாம் இன்று காலை சோமசுந்தரப் புலவர் மணிமண்டபத்தில் மாலைவரை எட்டு மணிமட்டத்தில் ஆரம்பமாகிறது.

இப்பயிற்சிக்கான இந்த வாரம் சமூக மாற்றம் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கும் இடம்பெறும். மாலை அறவாழ்வு பற்றிய படப் பயிற்சியும் நிழற்சித்திரங்களும் இடம்பெறும். இரவு பிரார்த்தனையும் இடம்பெறும். (செ)

ஏழாலை பூசாரி கொலை; எதிரிகள் மூவரும் விடுதலை

[மானிப்புரம்]

ஏழாலை பூசாரி கொலை குற்றத்தை சந்தேக நபர்கள் மூவரும் மல்லாகம் நீதிபதியால் விடுதலை செய்யப்பட்டனர்

ஏழாலை பூதவராயர் கோவில் பூசாரியாரான [illegible] லிங்கம் கதிர்த்தம்பி (50 வயது) என்பவர் இனந்தெரியாதவர்களால் முறித்து கொலைசெய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சடலம் இதாடர்பாக பொலிசாரால் தேடப்பட்ட [illegible] கதிரவேலு செல்வராசா, கதிரவேலு ஞானசம்பந்தன், கதிரவேலு கோபாலசிங்கம் ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்து தடுப்பில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்

இந்நபர்கள் மீதான மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜரான போது சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஜே செல்வராஜாவினால் இவர்களுக்கெதிராக கொலையுண்டவரின் மரணவிசாரணையில் எவரும் சாட்சியம் தெரிவிக்கவில்லை யாதலால் இவர்களை விடுதலை செய்யவேண்டுமென மேற்கொள்ளப்பட்டார். இதையடுத்து நீதிபதி நீதி எஸ் ஆனந்தக் குமாரசாமி சந்தேகநபர்களை விடுதலை செய்தார்

புதிய அதிபர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரடி மகாவித்தியாலயத்தில் புதிய அதிபராக திருமதி இராஜநாயகராஜ நியமனம் செய்யப்பட்டுள்ளார்

இந்த மகாவித்தியாலயத்தில் அதிபராக இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு டி எஸ் சே வனசிங்கா கடமையாற்றியபோதுதான் கவர்னரின் கொழும்புக்கு மாற்றம் செய்யப்பட்டார் திரு வனசிங்காவிற்கு பதிலாகவே திருமதி இராஜநாயகராஜ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சிகிரியாவுக்கு யுனெஸ்கோ உதவி

[மாத்தளை]

சரித்திரம் பிரசித்திபெற்ற சிகிரியா மிரதேச யுனெஸ்கோ உதவியினால் புனர்நிருமாணம் செய்யப்படவுள்ளது. [ந]

மதிய உணவாக சோறுகறி

(நெல்லியடி)

உடுப்பிட்டி கல்வி வலயத்தில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக அரசாங்கம் வேதாரணிய கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களுக்கு மதிய உணவாக சோறு வழங்கப்பட்டு வருகிறது.

மாதத்தில் ஒரு நாள் வழங்கப்படும் இந்த மதிய உணவான சோறுடன் கறியும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்விநியோகமாக பெற்றோர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து இந்த மதிய உணவை வழங்கி வருகின்றனர்

பரிசு பெற்றனர்

[வாழ்ப்பாணம்]

பெரியபுலம் தமிழ்க்கலைவிழாவாக இந்த மாதம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஒலிபூசையை முன்னிட்டு நடாத்திய கட்டுரைப் போட்டியில் பின்வருவோர் பரிசில் பெற்றனர்

மேற்பிரிவில் முதலாம்பரிசு செல்வி இ இராஜேஸ்வரி [illegible] மகிழ செல்வி உதயகுமாரி, மூன்றாம் பரிசு; செல்வி க இராசாத்தி

மத்தியபிரிவில் முதலாம் பரிசு; செல்வன் பி [illegible] இரண்டாம் பரிசு; செல்வன் த [illegible], மூன்றாம் பரிசு; செல்வன் ச உமாகுமரன்

கீழ்ப்பிரிவில் முதலாம் பரிசு; செல்வன் [illegible] நேமிநாதன், இரண்டாம் பரிசு; செல்வன் கு வரதராசா, மூன்றாம் பரிசு; செல்வன் [illegible] ஸ்ரீகாந்

[மட்டக்களப்]

தமிழ் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்று விரைவில் காத்தான்குடியில் நிறுவப்படவுள்ளது.

தற்போதுள்ள சுகாதாரப் பிரிவுகளுக்கான பொது சுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சி நிலையத்தில் சிங்களமொழியில் மட்டுமே போதிக்கப்பட்டு வருவதால், தமிழ் பயிற்சியாளர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை தவிர்க்கும் முகமாகவே காத்தான்குடியில் புதியதொரு தமிழ் பொது சுகாதார பரிசோதகர் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

HAYLEYS

பெற்றர் டீசல் எஞ்ஜின்கள்



வசேட 20% தள்ளுபடிக்கு, குறிப்பிட்டளவு கையிருப்பு மட்டுமேஉண்டு.

பெற்றர் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு சிறந்த விதி முறைகளுடன் வங்கிக்கடன்கள் ஒழுங்கு செய்ய உதவி புரியப்படும்.

தொடர்பு கொள்க:-
பொறியியல் விற்பனை,
பராமரிப்புப் பகுதி;

மகாராணியின் தொழிற்துறை விருது பெற்றது.

ஒரு ஹோக்கர் சிட்லி கம்பனி.

ஹேலீஸ் லிமிட்டெட்,
25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 96331-6 இணைப்புகள்.

melADS

காந்தி - காமராஜர் காணவிரும்பிய பாரதத்தை ஜனதாகட்சி உருவாக்கும்

ஜனதா பொதுச்செயலாளர் வாஜ்பேயி உரை

சென்னை, டிச 19

மகாத்மாகாந்தி காணவிரும்பிய பெருந்தலைவர் காமராஜர் ஆவலோடு பாடுபட்ட நிறைவான இந்தியாவை உருவாக்கி பாடுபடும் ஜனதாவுக்கு ஆதரவு தாருங்கள். இந்த பெரும் பணியில் ஜனதாவுக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கும் எம். ஜி ஆர் தலைமையிலான அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளிக்க வேண்டியது தமிழக மக்களின் கடமையாகும்.

இவ்வாறு ஜனதா கட்சியின் தமிழ்நாடு பொதுச் செயலாளர் திரு ஜகந்நாதமூர்த்தி வாஜ்பேயியின் ஆங்கில உரையின் தொகுப்பாகக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அண்மை மாநிலங்களுக்கு விருப்பத்தின் வகையில், மத்தியில் ஆள்கிற கட்சியைத் தொடர்ந்து ஆட்சிமொழிபாராளுமன்றத்திலும் ஜனதா கட்சி கருத்துவிளம்பியுள்ளது

தமிழ்மொழி வளம் பெற....

தமிழ்மொழி வளம்பெற ஜனதா கட்சி அனைத்து முயற்சியையும் மேற்கொள்ளும்

தெய்வீகப் புலவர் வள்ளுவரின் திருக்குறளை உலக அரங்கான ஐக்கிய நாடுகள் சபையில் முதல் தடவையாக முழக்கியவர் ஜனதா அமைச்சர்தான்

மிசா சம்பந்தமாக ஒழிந்தது ஜனதா—, ஆரியம் வந்தால் ஆண்டவரையும் விடுவிக்கும் ஜனதா— பத்திரிகைச் சுதந்திரத்தைப் பரிபூரணமாக வழங்கியது ஜனதா— நீதித் துறையில் சுயேச்சையை மீண்டும் நிலைநாட்டியது ஜனதா— தொலைக்காட்சி, வானொலியில் ஆளுங்கட்சிக்குச் சமமாக எதிர்க்கட்சியினரும் தமது கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பளித்தது ஜனதா.

அதிகாரமும் நிதி வளமும்

அதிகாரமும், நிதி வளமும் மத்தியில் குவிக்கப்பட்டதால் பயன் கிடையாதென்பதை உணர்ந்த ஜனதா கட்சி தமது ஆட்சிக் காலத்தில் அதிகாரத்தையும், நிதி வளத்தையும் பாராளுமன்றத்திலிருந்து பஞ்சாயத்து வரை பகிர்ந்தளித்தது.

சர்வதேச அரங்கில் செல்வாக்கு அதிகரித்தது

ஜனதா கட்சி ஆட்சியிலேயே சர்வதேச அரங்கில் இந்தியாவின் செல்வாக்கு, மதிப்பு அதிகரித்தது. அண்டை நாடுகளுடன் நட்பு நாடுகளாகியிருப்பதை நாடாக இருந்த சீனாவுடன் நேர்கோடு நீட்டியது பார்க்க-இந்திய உறவில் புதிய அத்தியாயம் உருவாகியது.

ஜனதா கட்சி ஆட்சியேற்றபோது ..

ஜனதா கட்சி 2 ஆண்டு ஞ்சு மாதம் பதவியை ஏற்றபோது விலைவாசி விஷம் போல் ஏறியிருந்தது வறட்சி தாண்டவமாடியது சமையல் பொருட்களுக்கும் பற்றாக்குறை நிலவியது சுரண்டலும் ஏற்றத்தாழ்வும் மிகுந்து காணப்பட்டது

காங்கிரஸ் கட்சியின் 30 ஆண்டுகால பகுதியில் விலைவாசி கணிசமாக உயர்த்தப்பட்டிருந்த தொழிற்துறையில் தேக்கம் காணப்பட்டது பணவீக்கம் அதிகரித்தது. வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை

ஜனதா கட்சி பதவிக்குவந்ததும் இதற்கெல்லாம் பரிகாரம் காணப்பட்டது.

ஜனாதிபதி பதவியைக்கூட நாடி ஒரு முஸ்லிம் பெருமகனுக்கு வழங்கினோம்.

திறமைசாலி ஜெகஜீவன்

நாட்டை ஆள்வதற்குத் திறமையான நிர்வாகம்வேண்டும் நிர்வாகத்தில் திறமைசாலி எனப் போற்றப்படுகிற திரு ஜெகஜீவன்ராம் ஜனதாகட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்

ஜனதாகட்சியின் நிலையான ஆட்சியைக் கவிழ்த்து, மத்தியில் நிலையற்ற தன்மையை உருவாக்கியவர்களாக நாட்டில் நிலையானதொரு ஆட்சியைத் தரமுடியுமா? (இ)

ஜெகஜீவனின் விமானத்திற்கு கல்வீச்சு!

புதுடில்லி, டிச 19

ஜனதாகட்சித் தலைவர்களில் ஒருவரான திரு ஜெகஜீவன்ராம் பயணஞ்செய்கிறார்த ஹெலிகொப்டர் விமானத்திற்கு உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீசியதாகவும் அவர் காரொன்றில் தமது பயணத்தைத் தொடர்ந்தாரென்று தெரிவிக்கப்பட்டது.

திரு ஜெகஜீவன்ராம் எதிர்க்கட்சியினரால் ஆளுமுமிக்க ஆதரவாளர்கள் காப்பாற்றினரென்று தெரிவிக்கப்பட்டது (இ)

பூகம்பத்திற்கு 25 பேர் பலி!

ஜகார்த்தா டிச. 19

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு 25 பேர் பலியாகினரென்று அறிவிக்கப்பட்டுள்ளது

200 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் ஒரு கிராமம் அழிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது (இ)

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ பன்றிக்கோட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெற்று வரும் பிரதிஷ்டா பெருங் கதைப்படிப்பை முன்னிட்டு திருவிழாவரட்டி புராண விரிவுரைத்தொடரில் "தருமிக்குப் பொற்கிழி" என்ற பொருளில் பிரமஸ்ரீ வை நித்தியானந்தசர்மா விரிவுரை நிகழ்த்துவார்.

மாதகல் மேற்கில் தபால் நிலையம்

(மண்டைதீவுப்)

காங்கேசன்துறைத் தெற்கு குதியிலுள்ள மாதகல் மேற்கில் புதிய உபதபால் நிலையமொன்று விரைவில் திறக்கப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை தபால் தந்தித் தொடர்புகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. காங்கேசன்துறைத் தொகுதி எக்கியும் எதிர்கட்சித்தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் மாதகல் மேற்குப்பகுதி மக்களின் நலன்கருதி அப்பகுதியில் ஒரு உபதபால் நிலையத்தை நிறுவித்தருமாறு நீண்டகாலமாகத் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சரை வேண்டிக் கொண்டதற்கிணங்க இந்த உபதபால் நிலையம் திறக்கப்படவுள்ளது (ஈ)

'ஈழத்து சைவமக்களுக்கு இந்தஆண்டு முக்கியமானது'

--சிவத்தமிழ்ச்செல்வி

(காங்கேசன்துறை)

"ஈழத்து சைவத்தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஆண்டு விழுமியதோர் ஆண்டு முதலிரு வெளியீட்டுகளாலும், நாவலர் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படுவதாலும் முக்கியத்துவம் பெறுகிறது எமது வழிகாட்டி என்ன முன்னோடிகளை காலத்துக்குக்காலம் நினைவு கூர்ந்து வருவதுடன் நில்லாது அவர்களது அடிச்சுவட்டை நாம் பின்பற்றி வருகிறோமா என்பதையும் சிந்திக்கவேண்டும்".

இவ்வாறு காங்கேசன்துறை யாழ்ப்பாணம் பாடசாலைகள் இணைந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடிய நாவலர் நூற்றாண்டு விழாவில் கலந்துரையாற்றிய செல்வத்தமிழ் செல்வி தங்கமா இப்பாக்குட்டி கூறினார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு க பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

இன்று நம்மத்தியில் தமிழ் கொழுந்து உரிமையிலும் வெற்று கூரலெழுப்புகிறோம் இதே வேளையிலே நிலை ஏற்பட்டிருந்திருப்பாது நாவலர் எமக்கு கிடைத்தார். நூல்கள் எழுதியும், சொற்பொழிவுகள் செய்தும் சைவ, தமிழ் தொண்டாற்றி வைத்ததையும், தமிழையும் வளர்த்தவர் அவரே எமக்கு மட்டுமல்ல கூட புலர் அவருக்கு பலவகையிலும் இருந்துள்ளவர் கூறுகிறார் அஞ்சாது தொண்டாற்றினார்

இன்று நமது சமயம் இருக்கும் நிலையை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் எதுசமயத்திலே இன்று இவ்வாறு சமயங்களில் பல உருவாகியுள்ளன அவர்களுக்கு நாளுக்கு நாள் மாறுகின்றன ஆனால் அவர்களுக்கே திருமுறைகள் தெரியாமலிருக்கின்றன சமயம் பெற்றுக்கொள்வது பட்டமே அவர்களது நோக்கமாக இருக்கிறது இவ்வாறான போலி வாழ்க்கையால் நமது சமயமோ, மொழியோ முன்னேறமுடியாது ஆகவே நாவலர் காட்டிய வழியில் நாம் செல்கிறோம் எமது இரு கண்களான சைவத்தையும், தமிழையும் காப்போம்" என்றார்

வாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு வித்தியானந்தன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"ஆறு முக நாவலர் பெருமான் தாம் எழுதத்தொடங்கி 34 ஆண்டுகளில் 59 நூல்களை வெளியிட்டது கச்சுவாரி, பணவசதி இல்லாத காலத்தில் அரும் சாதனையாகும். இறந்தவை சூழ்நிலையால் எமக்கு நாவலரை முன்னோடியாக மாற்றித்தந்தது அவர் ஆற்றிய பணிகள் ஏராளமானவை அவர் கொள்கைகள், எனவுக்கு நன்வரை நாம் உழைப்போம்".

வைத்தீஸ்வராக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு ச [illegible] பேசுகையில் கூறியதாவது:

"நாவலர் விழாக்கொண்டாடும் இச்சமயத்தில் நாம் சைவ நெறியை வளர்த்திருக்கிறோமா என்பதை சிந்திக்கவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் சமய நூல்களைக்கொண்டு நூலகம் அமைத்துக்கொள்ளுதல் அவசியமாகும். இதன்மூலம் சமய அறிவு பாரம்பரியம் வளர முடியும். பாடசாலைகளிலிருந்து வரும் புத்தகங்கள் பாடப்புத்தகங்களாக்கப்படவேண்டும் கமிட்டிகள் அமைத்து பாடப்புத்தகங்களாக்கப்படவேண்டும் கமிட்டிகள் அமைத்து பாடப்புத்தகங்கள் தயாரிப்பதால் பயனில்லை [illegible] சமயம், நர்மசாஸ்திரங்களின் சாரமாக சமயபாடப்புத்தகங்கள் விளங்க வேண்டும். நாவலரதுபுத்தகங்கள் இதற்கு எடுத்துக்காட்டு."

நாவலர் நினைவு பேச்சு கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் பேச்சு, கவிதை என்பனவும் இடம்பெற்றன

அடங்கிய செறிதிரவம்
உற்பத்தியாளர்
பேயர் ஜெர்மனி
இலங்கையில் இப்பொருள் தயாரிப்பாளர்
ஹேகெம் லிமிட்டெட்
400. டீன்ஸ்ரோட். கொழும்பு 10.

வின்ஸர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப. 3-30, 6-00, 9-30
சிவாஜி - ஜெயலலிதா
ஜி. வரலட்சுமி
நடித்த
(புத்தம் புதிய பிரதி)
தாய்

75-வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறாள்!
மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
வெ. ஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா,
நடித்த
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

75-வது வெற்றித் திருநாளை நோக்கி
ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி காட்சி 10-30, பி.ப 3-30, 6-15, 9-45
சிவாஜி கணேசன் - சுஜாதா
நடித்த
(வெள்ளிவிழாச் சித்திரம்)
தீபம்
(வர்ணக்கலர்)

தினசரி ட்சிகள்
ராஜா
(யாழ்ப்பாணம்) முத்துராமன்-விஜயா-சுந்தராஜன்
நாணல் (புதிய பிரதி)

21-12-79 வெள்ளி முதல்
காலை 6 30 காட்சியுடன் ஆரம்பம்
ஓ மைடியர் டாக்டர்- சிவாஜி
நீ என்ன கண்ணனா -- விஜயா
ஜெனரல் சக்கரவர்த்தி

75-வது வெற்றித் திருநாளை நோக்கி
சாந்தி யாழ்நகர். போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜெய்... ஸ்ரீதேவி... எம். ஆர். ராதா... மனோரமா...
டாக்ஸி டிரைவர்
கண்ணைக் கவரும் உன்னத வண்ணச் சித்திரம்

New Year Release
REGAL Jaffna) Daily at 2-00, 4-30 7-00 & 9-30 p m.
The French Connection was only the Beginning
This is the Climax
GENE HACKMAN returns as Popeye Dajde Stalking Frenchman through Marseilles on a Snicide chase to the edge of his own li e
GENE Haekman, BERNARD FRESSON
in
French Connection ii
(Colour by De Luxe)

RANEE - Jaffna குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
Daily 5 Shows at 10-30 a m 2-15, 4-45, 7-15 & 9-45 p.m
கிளின்ற் ஸ்ட்வூட்டின்
"கை பிளேன்ஸ் றிவ்ப்ரர்"
"High Plains Drifter"

வெலிங்டன் தினசரி 6 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
குமரிப் பெண்
21-12-79 முதல் கைகொடுத்த தெய்வம்
ஸ்ரீடோ தினசரி 4 காட்சிகள் போன்: 7698
அபிமான் (ஹிந்தி)

"மழிப்பற்றும் இனப்பற்றும் உடையவர்கள்"

(சிந்தனைச்சேணி)

"வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு அந்நகர் கிராமத்திலுள்ள மக்கள் மொழிப்பற்றுக் இனப்பற்றுக் உடையவர்கள். கடந்த காலங்களிலே இக் கிராமங்களை நமது எவ்வளவோ இளைஞர்கள் நேர்ந்து மொழிப்பற்றினாலும் இனப்பற்றினாலும் வந்தன அனுபவித்தவந்தனர்".

இவ்வாறு காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி வளாகப்பிரவேச மண்டபத்தில் திரு. வே. சந்தசாமி ஆசிரியர் சமாதான நீதவான் பட்டம் பெற்றமைக்கான கௌரவிப்பு முகமாக பாராட்டுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

"இவ்விடத்தில் ஆசிரியர் திரு வே சந்தசாமிக்கு சமாதான நீதவான் பட்டம் கிடைத்தமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது என்றார்

இவ்விழாவை வைத்திய கலாநிதி க. க. கார்த்திகேசன் விளக்கேற்றி வைத்தார் விழா விசு ஆரம்பத்தில் சமாதான நீதவான் வேலாயுதம் தியாகராஜாவுடன் புதிய நடனங்களுடன் கலைநகர் நேரு கிராமமுன்னேற்றச்சங்க முன்றலில் இருந்து கட்டக்கமதானத்தில்லு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. தர. திரு. திருநாவுக்கரசு உட்பட பல பிரமுகர்கள் பாராட்டிப்பேசினார்கள்

(பி)

சிறுவர்கள் அனுமதி

[பண்டத்தரிப்பு]

ஆதரவற்ற அநாதைப் பிள்ளைகளாக விளங்கிய திருச்சபையின் வாழ்ப்பாண மத்திய கட்சாதீனம் மானிப்பாயில் நிறுவியுள்ள 'அருளகம்' என்னும் புதிய விடுதியின் திறப்புவிழா கடந்தவாரம் நடைபெற்றது ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட இவ்விடுதியை வெறுபடு ஆதீன உதவி மத்திய கட்சாதீனர் கலாநிதி டி. சிவபாலசுந்தரன் சம்பிரதாயமுறைப்படி திறந்துவைத்தார். திறப்பு விழாத் தினத்தன்று பதினைந்து ஆதரவற்ற சிறுவர்கள் இவ்விடுதியில் அனுமதிக்கப்பட்டனர் உணவு உடை, இருப்பிடவசதிகள் யாவும் இவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன் இலவசக் கல்வியும் அளிக்கப்படுகின்றது

[4]

வெஸ்லி (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 3-30
கௌரி கல்யாணம்

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows
CRAZY BOYS ARE BACK in
Hong Kong With Love

நாகம்ஸ் (கல்லுண்டாய்)
தினசரி 6-45, 10-00, சனி, ஞாயிறு 3-45
விசேஷக்-சந்திரகாந்தா
இது சத்தியம்
(புதிய பிரதி)



வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு இராமசாமி தலைமையில் நடைபெற்ற மரக்கறி நாட்டுக் கிழங்கு வடமாகாண சாரணர் சங்கத்தாருக்கான கேடயத்தை மிசனரி தொழில் அதிபர் விநாயகபதி திரு நி. மாணிக்கவாசகரிடம் வழங்கினார்

இன்றைய பலன்

மார்கழி மாதம் 5ம் திகதி
விபாவ வருடம்
(20-12-1979)

மேஷம்: நண்டுநாட்களின் பிற்பகுதி இன்று நிறைவான நினைவு, இனிமையுடன் இல்லறம் அமைதி பெறும். அதிபர்கள் ஆதரவு உண்டு.

இடபம்: வட்டமிடும் சூழுகுப்பார்வை உள்ளே மிரட்டப்பார்க்கும், எதிரிகள் விடயத்தில் விழிப்புடன் இருக்கவும், எந்தொழிலிலும் தொல்லையுண்டு

மிதுனம்: ஆனந்தமயமான வாழ்வை, பொன்னான வாழ்வு பெண்ணாலே கிட்டும். கண்ணியம் கைவிரிக்கும், கடமையும் தெரியும்.

கடகம்: நண்பர்களை மோசடி நடக்கும், நண்பர்களுக்காக வாரி விடக்கூடும், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லைக்கும் ஆளாகுவீர்கள்.

சிங்கம்: இன்று பிறந்த குழந்தை நிலைவு நன்றாகும், பெரியோரின் ஆதரவும் தப்பாமல் கிட்டும், எதிர்பார்த்த வரவிலும் திருப்தி காணும்.

கன்னி: எண்ணத்தறையில் வலையான சந்தர்ப்பம் கிடைக்கும், எண்ணிய சுமக்களில் வெற்றியுண்டு, தனவிருத்தியுண்டு, திருப்திகரமான தினம்.

துலாம்: நண்டுநாள் கோடுக்கள் வரிகள் பிணக்கு நிவர்த்தியாகும், கல்வியில் ஈடுபடுவோர் உற்சாகமடைவர். குடும்பசுமுகம் ஏற்கே வெற்றியுமுண்டு

விருச்சிகம்: தொழிலில் கவனமின்மை தோன்றும், கோதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம், வீணான சிந்தனையால் சுகாதாரத்தைப் பேணி நடக்கவும்.

தனுசு: அதிக முயற்சியுடன் தனிர்த்துக் கொள்ளவும், குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம், சிறு பயணம் நிற்குமிடமேற்படலாம்.

மகரம்: பெருக்கு நிலை நிரவியலாபமும் கிடைக்கலாம் கண்களைப்போல் இனிய வாழ்க்கை, காதல் விடயமும் வெற்றிபெற இடமுண்டு

கும்பம்: இயற்கையுடன் பழகுவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். சோடுக்கள் வரிகள் மூலம் அபிப்பிராய பேதங்கள் ஏற்படக்கூடும். கடன்கள் நன்று.

மீனம்: தமையனாரிடங்களில் சுடுபடுவீர்கள் சுற்றுடனான மதிப்பு உயரும். தனச்சிறப்பு தொழிலும் சிறப்புப் பெறும்:

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

இந்திய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மடைப்புக்கள் என்ற தன்மை இல்லாதிருக்கிறது. அதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட காலவட்டத்தில் மடைப்புகளாக அமைகின்றன. அதனால் ரசிகனை விட சமூகத் தேவைகளையே அதிகம் பூர்த்தி செய்கிறது இந்திய நாட்டு ஞானத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது இவையே இந்தியக்கலைக் கிரம்பான தன்மைகள் எனலாம்.

'சமநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :.....
(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? .....
(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?.....
(4) புதிய பிரதமர் யார்?.....
பெயர்:.....
விலாசம்:.....
.....
.....
....
கையொப்பம் திகதி

கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "சமநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

தீ வைத்தல் வழக்கு;

எதிரிகள் விடுதலை

(மாவிட்டபுரம்)

வீட்டுக்குத் தீவைத்துச் சொத்துக்களைத் தொடர்ந்து பட்ட வழக்கில் எதிரியான கிராமசேவையாளர் ஒருவரும் மற்றுமிருவரும் சாட்சியங்கள் திருப்திகரமாக விடுதலைசெய்யப்பட்டனர்.

வசாவிளானைச் சேர்ந்த ஏழு இராமலிங்கம் என்பவரது வீட்டுக்குத் தீவைத்துச் சொத்துக்கு 500 ரூபா நஷ்டம் விளைத்த குற்றச்சாட்டில் கிராமசேவையாளர் ஜே. அருளானந்தம், ஈ. அருள் டொமினிக்ஸ்சோ, எஸ். ஆந்தோனிமுத்து ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி வாக்கு சம்பந்தமான பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு எஸ். ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

விசாரணையின்போது குற்றச்சாட்டை நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லாமையால் நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிராஜா, உ. வைரவநாதன் ஆகியோரும் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி உ. நடராசாவும் ஆஜராகினர்.

குற்றச்சாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நவரத்தினம் வோகநாதன் சின்னத்துரை நித்தியானந்தன், தம்பிமுத்து கென்ஸ் கோகன், கிங்ஸ்லி கமில் எஸ் நிமலன், ஜோசப் டேவிட் போல் ஜெயக் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

11-ம் எதிரி மரணம்

11ம் எதிரியான கிங்ஸ்லி கமில்லஸ் நிமலன் மரணமாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 9ம் எதிரியான சின்னத்துரை நித்தியானந்தன் காணவில்லையென்று எதிரிகள் சார்பில் ஆஜரான பிரேஷ்டசட்டத்தரணி திரு எஸ். தம்பிராஜாவை தெரிவித்தார். 10 எதிரிகளுக்கும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான தம்பிமுத்து, வெ. யோகேஸ்வரன், எஸ். சோமசுந்தரம், டி. ஆர். ரத்நாசிங்கம், ரி. எப். சேவியர், எஸ். நவரத்தினம், எஸ். சோமசேந்திரன், என். சிறிகாந்தா ஆகியோர் ஆஜராகினர்கள்.

விசாரணைகளைப் பார்ப்பதற்கு உள்ளேயும், வெளியேயும் ஏராளமான இளைஞர்கள் திரண்டிருந்தனர்.

5000 ரூபா பிணை

80ம் ஆண்டு ஜனவரி 10ம் தேதி எதிரிகள் ஒவ்வொருவரும் 5000ரூபா பிணைகட்ட வேண்டுமென்றும், விடுதலையின்போது வைரம் கடையாளம் கொடுக்கவேண்டுமென்றும் நீதிபதி தெரிவித்தார்.

2ம் எதிரி உடனடியாக பிணை செலுத்த சம்மதித்தார்.

விசாரணை நாளைக்காலை வரை பிற்போடப்பட்டுள்ளது. (ம)

நீதிமன்றத்தை அவமதிப்பு:

இளைஞருக்கு ஆறுமாத கடுங்காவல் சிறை

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதவான் நீதிமன்றத்தில் "பெஞ்சில்" ஏறி நீதவானிடம் வாதிடமுற்பட்ட இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஆறுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

ஊர்காவற்துறை அரம்பையைச் சேர்ந்த பொன்னுத்துரை நகுலன் என்ற இளைஞர் யாழ் நீதவான் நீதிமன்றத்தில் வேலதிக நீதவான் திரு சே. எஸ். சுரேஸிடம் வாதிட ஒன்றைக் கொடுக்க முனைந்தபோது நீதிமன்ற பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது மேலதிக நீதவான் திரு சே. எஸ். சுரேஸ் இவருக்கு 6 மாத கடுமிய சிறைத் தண்டனை விதித்தார். (கு)

தி.மு.க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாடு சட்டசபையின் தாராபுரம் றிசேவ் தொகுதி உறுப்பினரான இவர் தி.மு.க.வின் கொள்கை செயல் குறித்து தமக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களாலேயே தாம் இம்முடிவை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி சட்டசபையின் முன்னாள் உபசபாநாயகர் திரு ஐ. பாக்கியமுதும் நேற்று தி.மு.க.வில் சேர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

மதுபோதையில் ஒழுங்கீனம்

(யாழ்ப்பாணம்)

விதிவிக்கு மதுபோதையில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்காக தொடர்ந்து ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி. சிதம்பரம்பிள்ளை என்பவர் விதிவிக்கு மதுபோதையில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ் நீதவான் திரு. இராசலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்காக தொடர்ந்து நீதவான் ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

மகனிடமிருந்து தாலிக்கொடியை கடைவுக்கடையிலிருந்து மீட்டு எழுந்திக் கணிதமொன்று சென்றமைக்கு பொலிசாரினால் கைது செய்யப்பட்ட நபர் அதனை மீண்டும் கடைவுவைத்து அபராதத் தொகையைச் செலுத்தினார். (ம)

மரண அறிவித்தல்

திருமதி தம்பு மாணிக்கம்

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு அவர்களின் அன்பு மனைவி மாணிக்கம் அவர்கள் காலமானார். இவர் கந்தையா (இளைப்பாறிய P W D ஓவசியர்-ஒட்டிசுட்டான்) பரராசசிங்கம் (யாழ். மாநகரசபை மின்சார முகாரி) யோகராசா (யாழ். பெருந்தெருத் திணைக்களம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், தனலக்சுமி, கனகேஸ்வரி, புனிதவதி (ஆசிரியை, நல்லூர் கைக்குள C C தமிழ்ப் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் அருமை மாமியாரும், சிவராசா, கமலராசா (Ship Trade Corporation, Greece) ஸ்ரீகந்தராசா (Helenic Line Ltd Greece) பாமினி அமுதினி, சுபோதினி, தர்சினி ஆகியோரின் பேத்தியுமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று 20-12-79 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் தகனக் கிரியைக்காக 69, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

4434

ஸ்தாபனத்தாரின்

வடபகுதி ஏகவிநியோகஸ்தராகிய எமது

MAYURA SYNDICATE

நத்தார்-புதுவருட வெகுமதி

மனதுக்கிதமான புத்தம் புது டிசைன்களில்

கண்கவர் கலர்களில் -புதுமை நிறைந்த வண்ணங்களில்-அனைத்தும் உயர்ந்த ரகம்

★ ஜில் GIL பிளேபோய் ரூபா 130-00
★ ஜில் GIL பெல்ஸ் ரூபா 140-00
★ டெனிம் DENIM ஜீன்ஸ் ரூபா 150-00
★ மயூரா MAYURA பெல்ஸ் ரூபா 130 00
★ ரான்கிலர் Wrangalar சேட் ரூபா 120-00
★ கொர்டுறோய் Corduroy ஜீன்ஸ் ரூபா 175-00
★ டெனிம் DENIM ஸ்கேட் ரூபா 110-00
★ ஜில் GIL சிறுவர் பெல்ஸ் ரூபா 80-85-00
★ மயூரா MAYURA ஸ்கேட் ரூபா 110-00
★ கிறுக்நோபிள் KraigNoble சேட் ரூபா 90-00
★ பிளீட்டெட் (அச்சடித்த) ஸ்கேட் (இறக்குமதியானது)
Pleated(Printeds) Skirt (Imported) ரூபா 100-00

வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

லிங்கம் சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ... தொலைபேசி: 7684

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் மாதம் 20 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. GR 1848/78 The Eelanadu P B No. 49. Telegram Eelanadu Telephone 889.